**(நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2017 இல் பக்கம் 28 - 33 வரையுள்ள அவைத் தலைவரின் செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு)**

## அவைத் தலைவரின் செய்தி

எமது நிறுவனத்தின் 16வது வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதிலும், 2017 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான எமது ஆறாவது ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கையையும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் சமர்ப்பிக்க முடிந்தமையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். சவால் மிகுந்த பொருளாதாரச் சூழல் மற்றும் தொழில் துறையில் நிலவும் கடுமையான போட்டிக்கு மத்தியில் எமது நிறுவனத்தை 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேல்வரிசையானது 17% வளர்ச்சியையும் கீழ்வரிசையானது 41% வளர்ச்சியையும் இவ்வாண்டில் பெற்றுள்ளதை மிகவும் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றோம்.

### உலகளாவிய சூழமைவு

2017 உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 3.7% ஆக மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அதனை எதிர்பார்த்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் அது சிறந்த வளர்ச்சியைக் காட்டுவதுடன், உலக மொத்த தேசிய உற்பத்தியில் 75% வரையிலான பங்களிப்பை வழங்கும் நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி இதில் பிரதான செல்வாக்கினைச் செலுத்தியுள்ளது. இந்த முன்னேற்றத்துக்கமைய 2018ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் வளர்ச்சியடைந்த ஆசிய பொருளாதாரத்துடன், முன்னேற்றமான நகர்வுகளிலும் இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட எதிர்வு ஒப்பீட்டளவில் பல மறுசீரமைப்புக்களுடன் ஒரு பலமான நிலைமையை அடைந்தது. அபிவிருத்தி அடைந்துவரும் மற்றும் எழுச்சி பெற்று வரும் ஆசியா 2018இல் 6.5%இற்கு சமனான வேகத்தில் வளர்ச்சியடைய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் அபிவிருத்தியடைந்த பொருளாதாரத்தில் பயன்படுத்தப்பட்ட நிதிக் கொள்கைகள், உள்ளக நோக்குகையைக் கொண்ட கொள்கைகள், புவியியல் ரீதியான அரசியல் நிச்சயமற்றதன்மை மற்றும உலகம் முழுவதிலும் ஏற்பட்ட தீவிரமான காலநிலை மாற்றங்கள் மற்றும் வேறு காரணிகள் இந்த நிலலையில் பாதகமாக தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன.

### இலங்கைப் பொருளாதாரம்

பாரிய இரண்டு இயற்கை அனர்த்தங்களை எதிர்கொண்ட நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி கடந்த வருடத்துடன் ஒப்பீட்டளவில் 2017இல் 4% ஆவது வளர்ச்சியடைய வேண்டுமென மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு இடம்பெறுதற்கான பிரதான காரணம் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட எதிர்மாறான நிலமைகள் மற்றும் சேவைத்துறைசார் செயற்பாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியாகும். விவசாய நடவடிக்கைகளும் காலநிலை தொடர்பான இடர்களினால் பாதிக்கப்பட்டது. வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட கைத்தொழில் துறையிலான 4.5% வளர்ச்சிக்கு சுரங்கம் மற்றும் அகழ்வு நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கமும் உற்பத்தி செயற்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அதற்கு காரணமாக அமைந்தது. நிதிச்சேவைகள், போக்குவரத்து, சுகாதாதர சேவைகள், சில்லறை வியாபாரம், மொத்த விற்பனை என்பன கடந்த ஒன்பது மாதங்களில் வளர்ச்சியடைந்ததுடன், இதன் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவை செயற்பாடுகளின் வளர்ச்சி என்பன 4.2% அதிகரிப்பைக் காட்டியது.

தேசிய நுகர்வோர் விலைக் குறிகாட்டி மூலம் அளவிடப்படும் பணவீக்கம் வருட நடுவில் வழமைக்கு மாறான நிலமையைக் காட்டியது. வரித்திருத்தங்கள் தொடர்பாக தேசிய சூழமைவில் காணப்பட்ட பாதகமான தன்மைகள் மற்றும் உலகளாவிய ரீதியில் பண்டங்களின் விலை அதிகரிப்பு என்பன பணவீக்கம் அதிகரிக்க காரணமாக அமைந்தது. சராசரி வருடாந்த தேசிய நுகர்வோர் குறிகாட்டி 4.0% இலிருந்து 7.7% ஆக 2016 தொடக்கம் 2017 வரையிலான காலப்பகுதியில் அதிகரித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் உணவுப் பொருட்களுக்கான விலை அதிகரிப்பினால் 2017 டிசெம்பர் ஆகும்போது 6.6%ஆக சராசரி வருடாந்த பணவீக்கத்திற்கு சமனான வகையில் காணப்பட்டது. காலநிலை மாற்றங்கள் தொடர்பான குறிகாட்டி பணவீக்கத்தின் ஆரம்பத்தின்போது முற்றிலும் மாறான ஒரு நிலமையை காட்டியது. எவ்வாறாயினும் கொழும்பு நுகர்வோர் விலை குறிகாட்டியின் சராசரி பணவீக்கமானது 2017இல் 4.4% தொடக்கம் 5% வரையிலான வருடாந்த ஒரு பொதுவான வளர்ச்சியைக் காட்டியது.. இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகரித்த பணவீக்கம் காரணமாக சம்பளத்தின் உண்மையான பெறுமதி குறைந்தமையால் நுர்வோருக்கு செலவு செய்யக்கூடிய வருமான நிலையிலும் ஒரு எதிர்மாறும் தன்மை ஏற்பட்டது.

வட்டி வீதத்தில் 25% அதிகரிப்பினை ஏற்படுத்துவதன் மூலம் மத்திய வங்கி தமது கடுமையான நிதிக்கொள்கையை 2017ஆம் ஆண்டு வரையில் முன்னெடுத்துச் சென்றது. மத்திய வங்கியின் கடுமையான நிதிக்கொள்மை மற்றும் சந்தையில் திரவநிலையில் பிரயோகிக்கப்பட்ட கடுமையான கொள்கைகள் காரணமாக சந்தையில் வட்டி வீதங்கள் வருடத்தின் முதல் அரைக் கால்பகுதியில் அதிகரித்த நிலையில் காணப்பட்டன. எவ்வாறாயினும் 2017ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் அரசின் கடன் பெறும்தேவைகள் குறைவடைந்தமை மற்றும் அரசின் பிணைப்பத்திரங்களுக்கான சந்தையில்

வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்ததன் மூலம் சந்தை வீதங்கள் பெருமளவில் குறைந்ததனால் குறிப்பிட்ட வளர்ச்சியில் ஓர் எதிர்மாறான நிலமை ஏற்பட்டது.

2017இல் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பீடும்போது இலங்கை ரூபாவின் பெறுமதி 2.3% ஆல் வீழ்ச்சியடைந்தது. கடந்த காலத்துக்கான இக்காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் வருடத்தின் முதலாவது 11 மாதங்களில் இலங்கையில் ஏற்றுமதி வருமானம் 9.4% ஆல் வளர்ச்சியடைந்தது. உலக சந்தையில் பண்டங்களின் விலை அதிகரிப்பு, பிரதான ஏற்றுமதிப் பொருட்களுக்காக சந்தை வழமை நிலைக்குத் திரும்புதல் இத்தகைய வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. இறக்குமதிச் செலவுகளில் அதிகரிப்பு ஏற்பட்டாலும் ஏற்றுமதி வருமானம் அதிகரித்தல், முதலீடுகள் மூலமான அனுகூலங்கள் அதிகரித்தல் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கடன் மீளாய்வுகள் வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டமை ஊடாக சென்மதி மீதிகள் மீதான அழுத்தங்கள் குறைவடைந்தன.

வரவு-செலவு துண்டு விழும் தொகையை குறைத்துக் கொள்வதற்காக உச்ச மட்டத்திலிருக்கும் அரச கடன்கள் தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஒரு முயற்சியாக அரசு தனது வருமான வழிகள் மற்றும் அரச நிதி வருமானங்களை கூட்டிணைத்தலை தொடர்ச்சியாக மேற்கொண்டது. இந்த செயற்பாடுகளின் மத்தியில் 2018 ஏப்ரல் மாதம் 01ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டமூலம் இந்த நகர்வின் ஒரு முக்கியமான திருப்புமுனையாகும். தாபன வருமானங்களின் அடிப்படையில் மூன்று படிமுறையிலான வரிக் கட்டமைப்பொன்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டமை மற்றும் இந்த வரிக் கட்டமைப்பில் சில மாற்றங்களை அறிமுகப்படுத்தியன் மூலம் இது வரி அறவீடுகள் தொடர்பான ஒரு விரைவான செயல் முறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. வரையறுக்கப்பட்ட வருமான வள மூலங்கள், மற்றும் பாரிய அரச துறைகள் இவ்வாண்டில் அரச நிதிக் கொள்கையில் காணப்பட்ட பிரதான சவாலாகும். இச் சூழ்நிலையில் அதிகரிக்கும் செலவீனங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலும் மற்றும் அரச கடன்களை முகாமைத்துவம் செய்யவும் எடுக்கப்பட்ட பல முன்னெடுப்புக்களில் வரையப்பட்ட பொறுப்பு முகாமைத்துவ மசோதாவும் உள்ளடங்கும். இதற்கு மேலதிகமாக மேலதிக அழுத்தங்களைப் பலப்படுத்தும் நோக்கில் அரச நிதி பொறுப்புக்கூறல் முகாமைத்துவ சட்ட மூலத்துக்கு திருத்தங்களை சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுகூலமான வளர்ச்சியுடன் மேம்படுத்தப்பட்டட வெளிவாரி நிலமைகள் மற்றும் விவசாயத்துறையில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியுடன் 2018இல் பொருளாதாரம் சிறந்த செயலாற்று திறனை வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வளர்ச்சியில் பிரதான இயந்திரமாகவும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் கருவியாகவும் தனியார் துறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரச நிதி மற்றும் போட்டி நிலமைகளை அதிகரிக்கும் நோக்கத்துடன், நடுத்தரகால நிகழ்ச்சி நிரலொன்றை நடைமுறைப்படுத்த அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. எனினும் மிகவும் சிக்கலான சூழலுக்கு மத்தியில் இந்த இலக்கினை அடைவது சவால் மிக்கதாகும்.

**காப்புறுதித் துறை**

காப்புறுதித்துறை கடந்த சில வருடங்களில் பெருமிதம் கொள்ளக்கூடிய வகையில் வளர்ச்சியடைந்துள்ளதுடன், ஒட்டுமொத்த காப்புறுதிப் பணிக்கொடை நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரிப்பு வளர்ச்சி வேகத்தையும்விட கூடிய வேகத்தில் அதிகரித்துள்ளது. ஆயுட்காப்புறுதித் துறையில் மொத்த விண்ணப்ப கணிப்பு கட்டுப்பணம் 12% வளர்ச்சி வேகத்தைக் கொண்டுள்ளதுடன், பொதுக்காப்புறுதித் துறையில் மொத்த விண்ணப்ப கணிப்பு கட்டுப்பணம் 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2017இல் 17% ஆல் அதிகரித்துள்ளது. ஆயட் காப்புறுதித் துறையில் குறிப்பிட்ட ஆண்டில் குறைந்த வளர்ச்சி வேகமே பதிவாகியுள்ளது. காலநிலை தொடர்பான இடையூறுகளினால் நிலையான வருமான மூலங்கள் மீது ஏற்பட்ட இடையூறுகள் இந்த நிலமைக்கான பிரதான காரணமாகும். எவ்வாறாயினும் பொதுக் காப்புறுதித் துறையானது சிறந்த வளர்ச்சி வேகத்தைப் பதிவு செய்துள்ளது. இதற்கான காரணம் காப்புறுதி பணிக்கொடை அதிகரிக்கப்பட்டமை அரசினால் பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்தல் என்பன முக்கிய காரணமாகும். போட்டி மிக்க சூழலில் மேல் வரிசை விற்பனை புறழ்வையும் மற்றும் கீழ் வரிசை இலாபமீட்டல் போன்றவற்றில் வருடம் பூராகவும் தொடர்ச்சியான கவனம் செலுத்தப்பட்டது.

கூட்டிணைக்கப்பட்ட இரு காப்புறுதிக் கம்பனிகள், 12 ஆயுட் காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் 13 பொதுக்காப்புறுதி கம்பனிகள் 2017ஆம் ஆண்டு முடிவடையும்போது இயங்கிவந்தன. கடந்த வருடம் நடைமுறையிலிருந்த கூட்டிணைந்த காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை 3 ஆகும் என்பதுடன், ஆயட் காப்புறுதி மற்றும் பொதுக்காப்புறுதித் துறையில் ஈடுபட்ட காப்புறுதி நிறுவனங்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. அறியக்கிடைத்தவாறு ஒரு பொதுக் காப்புறுதிக்கம்பனியொன்று புதிய காப்புறுதி கொள்கைகளை தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லவும் தயாராக உள்ளது.

தொடர்ச்சியாக ஒழுங்குபடுத்தலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் அவற்றின் இணைக்க தேவைகள் உட்பட வேறு பொருளாதாரக் காரணிகளுக்கமைய சென்ற கடந்த சில வருடங்களாக காப்புறுதி தொழில் துறையிலும் குறிப்பிடத்தக்களவு மாற்றம் ஏற்பட்டதுடன், இதன் மூலம் தொழில் துறையில் தன்மையிலும் மாற்றம் ஏற்பட்டது. காப்புறுதி தொடர்பான புதிய பிரமாணங்கள் நடைமுறைக்கு வந்ததை அடுத்து தொழில்துறையில நிறுவனங்களை கையேற்றல், கூட்டிணைத்தல் போன்ற செயற்பாடுகளும் இடம்பெற்றன. தொடர்ந்து கூட்டிணைவதற்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியவாறு பலம்பொருந்திய நிறுவனங்கள் பொதுக்காப்புறுதித் துறையில் கையேற்றல், விலை கொடுத்து வாங்கல் போன்ற நடவடிக்கைகள் 2017ஆம் ஆண்டில் இடம் பெற்றன.

கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட இடர்களை அடிப்படையாகக் கொண்ட மூலதன ஆதிக்க நடைமுறை (RBC) ஆண்டிலும் மாற்றமேதும் இல்லாமல் முன்னோக்கிச் சென்றுள்ளது. அனைத்து தரப்பினராலும் ஒரே மாதிரியான கவனம் செலுத்தலை அறிமுகப்படுத்தும் நோக்குடன் ஆயுட் காப்புறுதி மீது இடர் அடிப்படையிலான மூலதன சட்டங்கள் ஒழுங்குபடுத்துபவரினால் தற்போது மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் ஒவ்வொரு காப்புறுதி நிறுவனங்களினாலும் இடர் நிலமைகள் மற்றும் அவற்றின் சகல சேவைகளும் ஒன்றோடொன்று மாறுபடுவதினால் இந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இதனை நன்கு ஆராய்தல் வேண்டும்.

காப்புறுதி தொழில் துறை தொடர்பாக நிதி அறிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறனதோர் பாரிய மாற்றம் நிதிக் கருவிகள் மீது இலங்கை நிதி அறிக்கையிடல் தரக்கட்டுப்பாட்டு இலக்கம் 09 பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய தரக்கட்டுப்பாடுகளாயின், தேவைகளை அங்கிகரித்தல் 2018இல் இடம்பெற வேண்டும் என்பதுடன், அதனை 2021 வரை பிற்போடுவதற்கான மாற்று யோசனையும் உள்ளது. மேலும், உலகம் முழுவதிலும் உள்ள காப்புறுதியாளர்கள் சர்வதேச நிதி அறிக்கையிடல் 17வது இலக்க தரநிர்ணயத்திற்கமைய காப்புறுதி ஒப்பந்தங்களை 2021 தொடக்கம் பின்பற்ற வேண்டுமென்பதுடன், இதன் மூலம் காப்புறுதியாளர்களின் நிதி அறிக்கையிடல் முறை குறிப்பிடத்தக்களவு மாற்றத்துக்கு உட்படும். இதற்கு மேலதிகமாக 2018 ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய வரி முறையின் கீழ் காப்புறுதித் துறையில் காணப்படும் வரி அறவீடுகள் தொடர்பாக பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி ஆயுட் காப்புறுதித் துறையில் 28% வரியையும் பங்களிப்பு அடிப்படையிலான காப்புறுதி உறுதிப்படுத்தல்களையுடைய ஆயுட் காப்புறுதியாளர்களின் 14% வரியையும் செலுத்த வேண்டும். ஆயுட்காப்புறுதி மீது விதிக்கப்பட்டுள்ள இந்த புதிய வரி குறைந்த பட்சம் குறகிய கால அடிப்படையில் பாதகமான விளைவினை ஏற்படுத்தும். எவ்வாறாயினும் காப்புறுதியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அரசு செம்டெம்பர் மாதம் 01ஆந் திகதியை தேசிய காப்புறுதி தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

2000ஆம் ஆண்டு 23ஆம் இலக்க காப்புறுதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம், 2017ஆம் ஆண்டு 23ஆம் இலக்க காப்புறுதிக் கம்பனிகளை ஒழுங்குபடுத்தும் திருத்த சட்டத்தினால் திருத்தப்பட்டது. இத்திருத்தச் சட்டம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதான மாற்றம் யாதெனில் காப்புறுதியாளர் கட்டாயம் செய்ய வேண்டிய பங்கு பட்டியலிட வேண்டிய தேவைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளமையாகும். இதன்படி எமது நிறுவனத்தினால் முழுமையாக நிருவகிக்கப்படும் எச்என்பீ ஜெனரல் இன்சூரன்ஸ் வரையறுக்கப்பட்ட கம்பனியை (HNBGI) கட்டாயம் செய்ய வேண்டிய பங்கு பட்டியலிட வேண்டிய தேவையிலிருந்து நீக்குமாறு இந்த சட்டமூலத்தின்படி விண்ணப்பிக்கலாம். இத்திருத்த சட்ட மூலத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றுமொரு மாற்றம் யாதெனில் ஒழுங்குபடுத்துநரின் பெயர் "இலங்கை காப்புறுதிச்சபை" என்பதற்குப் பதிலாக "இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் அதிகார சபை" என மாற்றப்பட்டிருப்பதாகும்.

**நிறுவனத்தின் செயலாற்றுதிறன்**

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 41% வளர்ச்சியை எடுத்துக்காட்டிய வண்ணம் எச்.என்.பீ. அசூரன்ஸ் பீஎல்சி கம்பனியானது இவ் வருடம் ரூ.910மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்தை ஈட்டி, கம்பனியின் இலாபத்தை மென்மேலும் அதிகரித்துக்கொண்டுள்ளமையை நான் இத்தால் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். கம்பனியின் ஆயுள் மற்றும் பொதுக்காப்புறுதி ஆகிய இரு பிரிவுகளிலும் உயரிய வினைத்திறன் எய்தப் பெற்றமையால், எமது கம்பனிக்கு இந்த விசேட வினைத்திறனைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

எச்.என்.பீ. அசூரன்ஸ் பீஎல்சி கம்பனியின் ஆயுட்காப்புறுதிப் பிரிவானது 2017ஆம் ஆண்டில் ரூ. 3.96 பில்லியன் மொத்த விண்ணப்ப கணிப்பு கட்டுப்பணம் 12% வளர்ச்சி யை அடையப்பெற்றது. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில், ஆயுட் காப்புறுதிப் பிரிவின் வருமான வளர்ச்சி வீதமானது குறைவாகவே காணப்பட்டது. கடந்த வருடத்தில் காணப்பட்ட 27% வருமான வளர்ச்சியை விடக் குறைந்தமைக்கு முக்கியமாக நடுத்தர மற்றும் நீண்டகால ரீதியில் கம்பனியின் நிலையானதன்மை மற்றும் இலாபத்தை அதிகரிக்கும் முகமாக மிகவும் பலமான அத்திவாரத்தை ஏற்படுத்தும் நோக்கில், தனித்த தவணை முதலீட்டு உற்பத்தியை

**(நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2017 இல் பக்கம் 28 - 33 வரையுள்ள அவைத் தலைவரின் செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு)**

குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட உபாயவழிமுறை தீர்ணமானம் காரணமாக அமைந்தது. அத்தகைய ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கையிலும் கம்பனியானது ரூ.726 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்தை ஈட்டி கடந்த வருடம் உழைக்கப்பெற்ற இலாபமான ரூ.600 மில்லியனை விட 21% இனால் அதிகரித்துக் கொண்டுள்ளது. மேலும், எமது ஆயுட் காப்புறுதி நிதியமானது 25% வளர்ச்சியை எடுத்துக்காட்டி இந்த நிதி ஆண்டின் இறுதியில் ரூ.11 பில்லியனை எட்டியுள்ளது. முக்கியமாக நாட்டின் பல பிரதேசங்களை பாதித்த வெள்ளம் மற்றும் வரட்சி போன்ற அனர்த்த நிலமைகள் காரணமாக வாடிக்கையாளர்களுடைய நிலையான வருமானத்துக்கு தடைகள் ஏற்பட்டமையால், தவணைப் பணத்தை அறவிடுகையில் வருடம் பூராகவும் காலத்துக்குக் காலம் நேர்ந்த இக்கட்டான நிலமைகளிலும் கம்பனிக்கு இத்தகையதொரு வெற்றியை அடைய முடிந்தமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

எமது பூரண நிர்வாக கம்பனியான HNBGI கம்பனியின் வினைத்திறனும் இவ் வருடத்தில் மென்மேலும் வளர்ச்சியடைந்ததுடன், இந்த வருடத்தில் எமது குழுமத்தொகுதி கூடிய வினைத்திறனைப் பெற்றுக்கொள்வதில் இது முக்கிய பங்களிப்பு நல்கியுள்ளது. HNBGI கம்பனியின் GWP ஆனது ரூ.3.91 பில்லியன் பெறுமதியைக் அடைந்து கடந்த வருடத்தை விட 24% வளர்ச்சியடைந்தது. விலையிடலில் எந்தவித மாற்றத்தையும் அறிமுகப்படுத்தாது, இத்தகையதொரு வளர்ச்சியை அடைந்தமை, முக்கியமாக இந்த வருடம் காப்புறுதி கொள்கைகளின் எண்ணிக்கையானது 2016ஆம் ஆண்டைவிட 11% இனால் அதிகரித்தமை காரணமாக ஏற்பட்டுள்ளதுடன், இதன் மூலம் உரித்து சேவையிலான மேம்பாடு மற்றும் எமது குறியீட்டுப் பெயர் மீது வாடிக்கையாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை எடுத்துக்காட்டுகின்றது. இதன் காரணமாக HNBGI இலாபமானது 2016 இல் அடையப்பட்ட ரூ.47மில்லியனுடன் ஒப்பிடுகையில், 289% விசேட வளர்ச்சியை எய்து, இந்த வருடம் ரூ.184 மில்லியன் இலாபத்தை ஈட்டியது. நாட்டில் பல பிரதேசங்களில் பெருவெள்ளம் மற்றும் சுழல்காற்று போன்ற அனர்த்தங்கள் காணப்படுவதன் காரணமாக உரித்து (நன்மைகள்) கோரலில் அதிகரிப்பு ஏற்படுதல் மற்றும் புதிதாக வாகனங்களை பதிவுசெய்தல் குறைவடைதல் ஆகிய நிலமைகளிலும்கூட இத்தகையதொரு வளர்ச்சியை அடைய முடிந்தமைமிகவும் பாராட்டுக்குரியதாகும்.

எமது குழுமத்தொகுதி 2016இல் பெற்றுக்கொண்ட ரூ.1.1 பில்லியன் முதலீட்டு வருமானத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் ரூ.1.7 முதலீட்டு வருமானத்தை ஈட்டுவதன் மூலம் 52% தெளிவான வளர்ச்சியை அடைந்துள்ளது. மேலும், இந்த நிதி ஆண்டு நிறைவடைகையில், முகாமைத்துவத்தின் கீழ் காணப்படும் நிதியானது ரூ.15பில்லியன் வரையறையையும் விஞ்சியுள்ளது. இந்த வெற்றிக்கான காரணம், பேரண்டப் பொருளாதார மாறிகளின் விளைவுகளிலிருந்து பயன்பெறும் முகமாக தயார் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வினைத்திறனான முதலீட்டு முகாமைத்துவ உபாயவழிமுறைகளாகும்.

முக்கியமாக கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் நாம் முன்னெடுத்த உபாயவழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு குழுமத்தொகுதி அடைந்துள்ள நிதி வினைத்திறனானது எதிர்கால சவால்களை வெற்றிகாண்பதற்குத் தேவையான பலமான பின்னணியை உருவாக்கியுள்ளதென்பதை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன்.

**நிறுவன கட்டுப்பாடு**

நிலையயான அபிவிருத்தியை பலப்படுத்தும் ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மற்றும் மனமுவந்து செயற்படும் கட்டுப்பாடு எனும் இரு வடிவிலும் நிருவாக கையாளுகைகளை பயன்படுத்துவதற்கு எச்.என்.பீ. அசூரன்ஸ் பீஎல்சி தம்மை அர்ப்பணித்துள்ளது. நிறுவனரீதியான நிருவாக கையாளுகைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை பின்பற்றுகையில், வெளிப்பாட்டுத்தன்மை குறித்து HNBA குழுமத்தொகுதி குறித்து நாங்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளோம். மீளாய்வு ஆண்டில் நாங்கள் உரிய அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகளுக்கும் அமைய செயற்பட்டுள்ளமையை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். உரிய இடர் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவ உபாயவழிமுறைகளைப் பின்பற்றி ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகளுக்கு அமைய காணப்பட வேண்டிய மூலதன போதியதன்மைக்கான வீதங்களைவிட உயரிய வீதத்தை வருடம் பூராகவும் முன்னெடுத்துச் சென்று குழுமத்தொகுதியானது இடர் அடிப்படையிலான மூலதன முறைமைக்குள் சிறப்பாக தம்மை உள்வாங்கிக்கொண்டது.
முன்னெடுக்கப்பட்ட நிருவாக கையாளுகைகள் பற்றிய முழுமையான அறிக்கையை நாங்கள் இந்த வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ளோம். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள நிறுவன நிருவாகம் பற்றிய நன்னெறிகள் கோவை 2017 டிசெம்பர் மாதம் திருத்தப்பட்டது. இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் கம்பனியின் நிறுவனரீதியான நிருவாக நன்னெறிகள் இத்திருத்தப்பட்ட புதிய கோவைக்கு ஏற்ற விதத்தில் தயார் செய்வதற்கு கம்பனியானது தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளும்.

**பங்கு இலாபம்**

கம்பனியின் வினைத்திறன் விருத்தியடைவதற்கு சமாந்திரமாக கம்பனியின் பணிப்பாளர் சபையினால், ஒரு பங்குக்கு ரூ.6.00 வீதம் பங்கு இலாபம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் 20% வளர்ச்சியாகும். 2017ஆம் ஆண்டுக்கான ஒரு பங்குக்கான உழைப்பு ரூ.18.20 ஆகும்.

**சமூகத்துடன் இணைந்து செயற்படுதல்**

சமூகத்துடன் இணைந்து செயற்படுவதன் வாயிலாக சமூக நற்தொடர்பு மூலதனத்தை கட்டியெழுப்பும் நோக்கில் கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு, வினைத்திறனான நீர் முகாமைத்துவம், மகளீர் வலுவூட்டல், சூழல், கலை மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளை நோக்கிப் பரந்துள்ள பயன்மிக்க நிறுவனரீதியான சமூகப் பொறுப்பு மிக்க பல செயற்பாடுகள் வாயிலாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தும் வகையில் நாம் பங்களிப்பு நல்கியுள்ளோம். விருதுபெற்ற எமது நீர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் வாயிலாக தொடர்ச்சியாக இந்நாட்டு கிராமங்களில் அமைந்துள்ள பல பாடசாலைகளுக்கு தூய குடிநீர் வசதிகளை வழங்கியுள்ளோம். மேலும், எமது குழுமத்தினால் முன்னெடுக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு சமூக நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட "சுவெதி திவியட்ட மகக்" எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் வாயிலாக தற்கால சுகாதார சிக்கல்கள் குறித்து பொதுமக்களது அறிவினை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை சமூக வைத்தியகல்லூரியுடன் இணைந்து கருத்தரங்குத் தொடரினை முன்னெடுப்பதற்கான அனுசரணையினை வழங்கி சுகாதாரம் பேணல் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் அறிவுப்பகிர்வு செயற்பாட்டுக்கு பங்களிப்பு நல்கப்பட்டது. வள நிரம்பல் குறித்து கருத்தில் கொள்கையில், எமது குழுமமானது நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலை மற்றும் ரிச்வே சீமாட்டி வைத்தியசாலையின் சிறுவர் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு வள அனுசரணை வழங்கியமையை முக்கியமாகக் குறிப்பிட முடியும். இந்த வருடத்தில் தொடர்ச்சியாக 12வது தடவையாகவும் வருடாந்த இரத்ததானம் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கு முடிந்தமையிட்டு நாம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

**விருது பெறுதல்**

எமது குழுமத்தின் நிலையானதன்மை மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு சமனான எமது செயற்பாட்டுக் கருத்திட்டங்களின் வெற்றியினை வெளிப்படுத்தியதற்காக நாங்கள் பல்வேறுபட்ட பரிசில்கள் மற்றும் பல கௌரவ விருதுகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம். HNBA கம்பனியினால் "எமது வாடிக்கையாளர்களை மகிழ்விக்கும் 15 வருடங்கள்" (15 Years of Delighting Our Stakeholders) எனும் தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2016ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்கு இலங்கை பட்டயக் கணக்காளர் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்படட 53வது வருடாந்த அறிக்கைகளுக்கான விருது வழங்கும் வைபவத்தின்போது காப்புறுதி கம்பனி பிரிவில் தங்க விருது கிடைக்கப்பெற்றது. மேலும், இலங்கை Fintelekt காப்புறுதி விருது 2017 விருது வழங்கலின்போது " நுண் காப்புறுதி முன்னோடி - ஆயுட் காப்புறுதி விருது 2017" தொகுதியிலான வெற்றியாளராக HNBA கம்பனி தெரிவுசெய்யப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்தும் பல கம்பனிகள் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கையிலும், HNBGI கம்பனியின் இஸ்லாமிய காப்புறுதிப் பிரிவுக்கு தென் ஆசிய இஸ்லாமிய நிதி பேரவையில் "வருடத்தின் தக்காபுல் பிரிவிற்கான" இற்கான தங்க விருது கிடைக்கப்பெற்றது. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய சந்தைப்படுத்தல் மாநாட்டின்போது ஆயுட் காப்புறுதி நிறைவேற்று சந்தைப்படுத்துநர் மற்றும் சந்தைப்படுத்தல் மேற்பார்வை தொகுதிக்கான வெண்கல விருதினை HNBA கம்பனியின் பிரதிநிதி திரு.கே.எம்.துலிஷ் வென்றெடுத்தார். மேலும், சுயாதீன கணக்காய்வின் பின்னர் HNBA கம்பனியின் ஆயுள் உரித்துகோரல் பிரிவின் சேவைத் தரத்துக்கான ISO 9001 : 2015 உரித்துச் சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளது.

**எதிர்கால நோக்கம்**

கடந்த 16 வருட காலமாக எச்.என்.பீ. அசூரன்ஸ் பீஎல்சியானது தொடர்ச்சியாக மாற்றங்களுக்கு உட்பட்டு சந்தை மாற்றங்களுக்கு சிறப்பாக முகம் கொடுத்து தொடர்ச்சியான வளர்ச்சியை காட்டியுள்ளது. ஆயுட் காப்புறுதி துறையில் ஆறாவதாக எமது இடத்தை தக்க வைத்துக்கொள்வதுடன், எமது தற்கால மற்றும் நெகிழ்ச்சிக்குரிய உபாயவழிமுறை முயற்சிகளின் வாயிலாக அனைத்து தரப்பினருக்கும் பெறுமதியான உற்பத்தியை வழங்கும் முகமாக கம்பனியின் மொத்த விற்பனை மற்றும் தேறிய வருமானம் ஆகிய இரண்டிலும் வளர்ச்சியை அடைவதற்கு முடிந்தது. நீண்டகால நிலைப்பு மற்றும் வளர்ச்சியை தக்கவைத்துக் கொள்வதற்காக பலமான இடர் முகாமைத்துவ சட்டகம் தொடர்பில் கவனத்தை செலுத்துவதுடன், வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஒப்பாக எதிர்காலத்தில் தொடர்ச்சியாக எமது உற்பத்திக் கோப்பினை மீளாய்வு செய்து மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். மேம்படுத்தப்பட்ட வினைத்திறன் மற்றும் வசதியை ஏற்படுத்துவதன் மூலம் கம்பனியில் விரைவில் வளர்ச்சி கண்டு வரும் வர்த்தக செயற்பாடுகளுக்கு வாய்ப்பினை ஏற்படுத்தும் முகமாக எமது

**(நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2017 இல் பக்கம் 28 - 33 வரையுள்ள அவைத் தலைவரின் செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு)**

வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கலின்போது எமது தொழிநுட்ப இயலுமையை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். நிலையான அபிவிருத்தி மற்றும் இலாபத்தை உறுதிப்படுத்தும் முகமாக தூரநோக்கான மற்றும் சந்தைக் கூறுணர்வுமிக்க உபாயவழிமுறைகளை தொடர்ச்சியாகப் பின்பற்றி, எமது தாய்க் கம்பனியான ஹட்டன் நஷனல் வங்கியின் வர்த்தகச் சின்னத்தை மேலும் பலப்படுத்துவதற்கு நாங்கள் எப்போதும் நடவடிக்கை மேற்கொள்வோம்.

**புதிய நியமனங்கள்**

இவ் வருடம் பணிப்பாளர் சபைக்கு மேற்கொள்ளப்பட்ட புதிய மூன்று நியமனங்கள் குறித்து இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். 2017 மே மாதம் 26ஆந் திகதி திரு. தீப்தி லொக்குஆரச்சி, முகாமைத்துவ பணிப்பாளராக (சுயாதீனமற்ற மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்) பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். மேலும், 2017 ஜுன் மாதம் 27ஆந் திகதி திரு. ரஜுவ் திசாநாயக்க, சுயாதீனமற்ற மற்றும் நிவேற்று அல்லாத பணிப்பாளராகவும், 2018 ஜனவரி மாதம் 01ஆந் திகதி திரு. ரவி அபேசூரிய சுயாதீன மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளராக பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

**இராஜினமா செய்தல்**

இவ் வருடத்தில் எமது பணிப்பாளர் சபையின் இரு உத்தியோகத்தர்கள் தமது பதவிகளை இராஜினமா செய்தனர். திரு.என்.எச்..ஐ.பெரேரா, சுயாதீனமற்ற மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர், 2017 ஏப்பிறல் மாதம் 27ஆந் திகதி தமது பதவியிலிருந்து விலகியதுடன், திரு.கே.பாலசுந்தரம், சுயாதீன மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் 2017 டிசெம்பர் மாதம் 22ஆந் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். எமது குழுமத்தொகுதியின் வளர்ச்சிக்காக அவர்கள் வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்புக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

**மதிப்பீடு**

எமக்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், பணிப்பாளர் நாயகத்துக்கும், ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது குழுமத்தின் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், காப்புறுதி ஒம்பூட்ஸ்மன் 2017ஆம் ஆண்டில் எமக்கு வழங்கிய பாரிய ஒத்துழைப்பு மற்றும் இத்தொழில்துறை மீதான அவரது பாரிய அர்ப்பணிப்புக்களை பாராட்டுகின்றேன்.

பணிப்பாளர் சபையின் எனது சக அங்கத்தவர்கள் அனைவரும் எனக்கு வழங்கிய பெறுமதியான வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பு இல்லாதிருந்திருப்பின் என்னால் இந்த குழுமத்தொகுதியை வெற்றிப் பாதையை நோக்கி கொண்டு செல்ல முடியாது போயிருக்கும் என நம்புகின்றேன். எனக்கு எப்போதும் தமது பெறுமதியான ஒத்துழைப்பினையும் பங்களிப்பினையும் வழங்கி சவால்மிகுந்த இவ் வருடம் முழுவதும் என்னுடன் கைகோர்த்துக் கொண்டமைக்காக பணிப்பளார் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் எனது உண்மையான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், எமது முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. தீப்தி லொக்குஆரச்சி, நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்கள் உள்ளிட்ட சிரேஸ்ட முகாமைத்துவத்தின் அனைத்து அங்கத்தவர்களும் எமது குழுமத்தொகுதியின் வெற்றிக்காக நிறைவேற்றிய பாரிய விடயப்பொறுப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன். மேலும், HNBA கம்பனியினதும் மற்றும் HNBGI கம்பனியின் அனைத்து பணியாட்குழு அங்கத்தவர்களும் அவர்களது நேரடி சேவை ஒழுக்கநெறிகள் மற்றும் சேவையில் அவர்கள் காட்டும் மிகுந்த அர்ப்பணிப்பின் ஊடாக குழுமத்தொகுதியின் வளர்ச்சியில் பாரிய பங்களிப்பு நல்கியுள்ளார்கள். நான் அவர்கள் அனைவருக்கும் எனது உண்மையான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அவர்களது அர்ப்பணிப்பை வெகுவாகப் பாராட்டுகின்றேன். மேலும், எம்மீது வைத்த நம்பிக்கைக்காக எமது பங்குடமையாளர்கள், வர்த்தகப் பங்காளர்கள் உள்ளிட்ட எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றிகளைத தெரிவித்துக்கொள்கின்றேன். நிறுவனத்தின் நிருவாக தரங்களை மேம்படுத்தி நிறுவனரீதியாக எம்மை மிளிரவைப்பதன் மூலம், எமது பயணப் பாதையில் உறுதியாக முன்னோக்கிப் பயணித்து நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை எப்போதும் மதிப்போம்.

ரோஸ் குரே
தலைவர்
09 பெப்ரவரி 2018

## முகாமைத்துவ பணிப்பாளராது மீளாய்வு

எச்.என்.பீ. அசூரன்ஸ் பீஎல்சி (HNBA) இன் ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கை மற்றும் நிதி அறிக்கையில், 2017ஆம் ஆண்டிலான முக்கிய சம்பவங்களை தொகுத்து முன்வைக்கக் கிடைத்தமையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்த வருடாந்த அறிக்கையானது எமது கம்பனி மற்றும் அதனால் முழுமையாக நிறுவகிக்கப்படும் கம்பனியான எச்.என்.பீ. ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் (HNBGI) இன் மூவித அடிப்படை விடயங்களின் செயலாற்றுதிறனை உள்ளடக்குகின்றது.

சவால்மிக்க பேரண்டப் பொருளாதாரச் சூழல் மற்றும் காப்புறுதி துறையில் ஏனைய சமகாலத்தவர்களின் கடுமையான போட்டித்தன்மைக்கு மத்தியில் 2017 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்தினுள் HNBA குழுமத்தின் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.910 மில்லியனை அடைந்து சாதனை படைத்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் வரிக்குப் பின்னரான வருமானமானது 41% வளர்ச்சியைக் காட்டுவது ஒரு முக்கிய அம்சமாகும். தொடர்ச்சியான வளர்ச்சியை நோக்கிய பாதையில் கம்பனியை வழிநடத்துவதற்கான வெற்றிச் சூத்திரத்தை குழுவின் வர்த்தக உபாயவழிமுறைகளும் இதற்கமைய இயங்கும் எமது அடிப்படை கோட்பாடுகளும் உருவாக்கியுள்ளன.

### சவால்மிகு வர்த்தகச் சூழல்

2016 ஒத்திசைவான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2017ன் முதலாவது அரைப்பகுதியில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது சிறியளவிலான அதிகரிப்பை (4%) காட்டியபோதிலும், (2016-3.7%) பொருளாதார வளர்ச்சியானது ஒப்பீட்டளவில் மந்தநிலையில் காணப்படுகின்றது. இந்த வருடத்தில் மொத்த மெய் உழைப்பூதியமானது வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்த பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில், 2017இல் பொருளாதார பெயரளவு சம்பள ஏற்றத்தில் மந்தநிலை காணப்படுகின்றது. இச்சூழமைவில் செலவிடக்கூடிய தனிநபர் வருமானமானது ஓரளவு வீழ்ச்சியடைந்ததுடன், இது மக்களினது கொள்வனவுச் சக்தியில் பாதிப்பை ஏற்படுத்தியமையினால், ஆயுட்காப்புறுதி துறையானது முக்கியமாக பாதிக்கப்பட்டது. அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட வரையறைகளின் காரணமாக, குத்தகைப் பிரிவிலும் பின்னடைவு காணப்பட்டதுடன், இதன் விளைவாக கடன் வசதிகளின் வளர்ச்சி குறைவடைந்தது. இந் நிலமைகளின் கீழ் காப்புறுதித் துறையின், ஆயுட் காப்புறுதிப் பிரிவில் குறை வளர்ச்சியும், பொதுக்காப்புறுதி பிரிவில் மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியும் காணப்பட்டது. 2017 மே மாதம் முகம் கொடுக்க நேர்ந்த பெரு வெள்ளப்பெருக்கானது பொதுக்காப்புறுதித் துறையில் இத்தகைய தருணங்களில் முதலீட்டு வாய்ப்புக்களில் பயன்படுத்தியிருக்கக்கூடிய நிதியை, உரித்து கோரல்களுக்காக வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டி நேர்ந்தது. மேலும், 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தலிலான மாற்றங்கள் காரணமாக காப்புறுதித்துறை பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்தது. கடன் தீர் ஆற்றல் சொத்து வரையறையிலிருந்து இடர் மூலதன வரையறைக்கு மாறியதன் காரணமாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட புதிய தீர்மானக் காரணிகளின் மீது காப்புறுதிக் கம்பனிகள் முழுமையாக உட்படுவதற்கு தயாராதல் வேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ள சர்வதேச நிதி அறிக்கை நியமங்கள் 17, 2020/2021 அளவில் தயார்செய்யப்படவுள்ளதுடன், இது காப்புறுதித்துறைக்கு மேலதிக சவாலாக அமைவதன் காரணமாக, மேலதிக முயற்சியுடன் மறுஅணிதிரட்டலுக்கான தேவையும் ஏற்படும்.

### உபாயவழிமுறைகள் மற்றும் அடிப்படை கோட்பாடுகள்

நிலையான அபிவிருத்தியை அடையும் முகமாக உபாய வழிமுறைகளைப் பின்பற்றுகையில், இடரை அடிப்படையாகக் கொண்ட பேரண்டப் பொருளாதார நிலமைகள் குறித்து கவனம் செலுத்திவண்ணம்

